**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-09042025-9021

Volume: 9

Issue: 4

Month: April

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 28.10.2024

Accepted: 15.12.2024

Published: 01.01.2025

Citation:
Muhammad Nawaz, AN, and I. Saujan. "Islamic Teachings in the Lullabies of Sri Lankan Rural Muslims: A Literary Review." *Shanlax International Journal of Tamil Research*, vol. 9, no. 4, 2025, pp. 82–93

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i4.9021

*Corresponding Author:
saujaniqbal95@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Islamic Teachings in the Lullabies of Sri Lankan Rural Muslims: A Literary Review

**A. N. Muhammad Nawaz & I. Saujan**
*Temporary Assistant Lecturers*
*South Eastern University of Sri Lanka*

**Abstract**

*In the literary world, each community travels with a unique literary background. This background is revealed when they articulate religious principles through literature. The rural Muslim community in Sri Lanka has sung lullabies that represent a part of folklore. While these songs fulfill the primary purpose of putting children to sleep, examining these literary works analytically allows us to view them through various methodologies including linguistics, philosophy, and ethics. This research subjects the Islamic teachings as embodied in the lullabies of Sri Lankan rural Muslims to content analysis and critical review.*

***Keywords:*** *Lullabies, Islamic Teachings, Rural Muslims, Rural Literature, Folklore Theories*

**References**

1. Akkermann, M., Can Akkaya, U., Demirel, C., Pflger, D., Dresler, M. (2021). Sound sleep: Lullabies as a test case for the neurobiological effects of music. Behavioral and Brain Sciences, 44, e96. https://doi.org/10.1017/S0140525X20001259
2. Mahaliyanarachchi, R. P., Panapitiya, S. (2023). Folk Poems and Songs to Empower Human Resources Engaged in Sri Lankan Paddy Farming: An Empirical Study. Journal of Agricultural Sciences & Sri Lanka, 18(3), 347&354. https://doi.org/10.4038/jas.v18i3.10131
3. Scarratt, R. J., Heggli, O. A., Vuust, P., Jespersen, K. V. (2023). The audio features of sleep music: Universal and subgroup characteristics. PLOS ONE, 18(1), e0278813. https://doi.org/10.1371/journal.pone.0278813
4. S. Muthumeiran. (1997). Folk Songs of Eastern Sri Lankan Muslims. Meeranmma Book Publishers, Nintavur, Sri Lanka.
5. S. Muthumeiran. (2007). Lullabies of Sri Lankan Rural Muslims (First Edition). NATIONAL PUBLISHERS- Chennai.
6. Dr. I. Balasundaram. (1979). Eelam Folk Songs.
7. Mr. Tamilannal. (1960). Love Life.
8. Mr. M.V. Aravindan. (1977). Folk Songs of Tamil Nadu.

# இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் தலாட்டுப் பாடல்களில் இஸ்லாமிய போதனைகள்: ஓர் இலக்கிய மீளாய்வு

**ஏ. என். முஹம்மட் நவாஸ் & ஐ. சௌஜான்**
தற்காலிக உதவி விரிவுரையாளர்கள்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

***ஆய்வுச் சுருக்கம்***
*இலக்கிய உலகில் ஒவ்வொரு சமூகமும் தனித்துவமான இலக்கிய பின்னணியில் பயணிக்கின்றன. அப்பின்னணியானது தாம் பின்பற்றும் மதம் சார்ந்த கோட்பாடுகளை இலக்கியத்தின் ஊடாக பிரஸ்தாபிக்கும போது அவை வெளிப்படுத்தப்படுகின்றன. இலங்கை கிராமத்து முஸ்லிம் சமூகம் நாட்டாரியலின் ஒரு பகுதியாக எடுத்துரைக்கப்படும் தாலாட்டுப்பாடல்களை பாடியுள்ளார்கள். அப்பாடல்கள் தாலாட்டின் பிரதான நோக்கமான குழந்தைகளை தூங்கச் செய்வதை நிறைவேற்றும் பணியை மேற்கொண்டுள்ள நிலையில், ஆய்வு ரீதியாக இவ்விலக்கியங்களை நோக்கும் போது மொழியில், தத்துவவியல், ஒழுக்கவியல் என பல முறைமைகளினூடாக ஊடறுத்து நோக்க முடிகின்றது. இவ்வாய்வானது இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் தாலாட்டுப் பாடல்களில் இஸ்லாமிய போதனைகள் எவ்வாறு உருவகப்படுத்தப்பட்டுள்ளது என்பதை உள்ளடக்கப்பகுப்பாய்வுக்கு உட்படுத்தி, விமர்சனரீதியாக மீளாய்வுக்கு உட்படுத்தியுள்ளது.*
***திறவுச்சொற்கள்:*** *தலாட்டுப் பாடல், இஸ்லாமிய போதனைகள், கிராமத்து முஸ்லிம்கள், கிராமத்து இலக்கியம், நாட்டாரியல் கோட்பாடுகள், இலங்கை, திறனாய்வு*

## அறிமுகம்

கள்ளம் கபடமில்லா வெள்ளையுள்ளம் கொண்ட இலங்கை கிராமத்து முஸ்லிம் தாய்மார்கள், தங்கள் அன்புக் குழந்தைகளைக் கண்மூடித் தூங்கச் செய்வதற்காகப் பாடிய தலாட்டுப் பாடல்கள் வாழையடி வாழையாக, இங்குள்ள மக்கள் மத்தியில் பாடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (முத்துமீரான், 2007) குழந்தைகளுக்குத் தூங்க உதவ பாடல்கள் மற்றும் இசையைப் பயன்படுத்துவது வரலாறு முழுவதும் நீண்டகாலமாக பாரம்பரியமாக உள்ளது (Scarratt et al., 2023). டிஜிட்டல் இசை தளங்களின் வளர்ச்சியுடன், பல நபர்கள் இப்போது தங்கள் தூக்கத்தின் தரத்தை மேம்படுத்துவதற்கான ஒரு கருவியாக பதிவு செய்யப்பட்ட இசையைக் கேட்கிறார்கள் (Scarratt et al., 2023). இசை ஒரு கலாசார நிகழ்வு மட்டுமல்லாமல் உயிரியல் தாக்கங்களையும் கொண்டுள்ளது. இசை மூளையின் செயல்பாடு மற்றும் உணர்ச்சி நிலைகளைப் பாதிக்கும் (Mahaliyanarachchi Panapitiya, 2023).

கிராமத்து முஸ்லிம்கள் என்ற நிலைப்பாடு மிக முக்கியமானதாகின்றது. ஏனெனில் பல்கிப் பெருகி வரும் நவினமயமாக்கமும், நவீனமயவாக்கத்தின் பல பண்புகளை உள்ளடக்கும் அதேவேளையில் தனக்கென சில சிறப்பியல்புகளைக் கொண்டதுமான நகரமயவாக்கமும் கிராம நிலையில் காணப்படுகின்ற பலவற்றை தொடர்ந்து பேணமுடியாத நிலைமையை ஏற்படுத்துகின்றன (Akkermann et al., 2021). எனினும் இன்று பல்வேறு முறைமைகளைப் பின்பற்றி தாய்மார்கள் தமது குழந்தைகளைத் தூங்கச் செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்கின்றனர். அம்முறைமைகள் பல்வேறு தாக்கங்களை

ஏற்படுத்த முடியுமானது என்பதை இவ்வாய்வுகளின் பெறுபேறுகள் சுட்டிக் காட்டுகின்றன. இந்நிலையில் இலங்கை கிராமப்புறச் சமூகங்களின் சூழலுக்குள் தாலாட்டுப் பாடல்கள் இஸ்லாமிய நெறிமுறை மதிப்புகளை உருவப்படுத்துவதில் எவ்வாறான பங்களிப்பை ஆற்றுகின்றன என்பதை இவ்வாய்வு இலக்கிய மீளாய்வின் ஊடாக வெளிப்படுத்த முனைகிறது.

படிப்பறியா ஏழைக் கிராமத்து முஸ்லிம் அன்னையர் தம் குழந்தைகளைக் கொஞ்சி மகிழ்ந்து பாடிய தாலாட்டுப் பாடல்கள் கிராமப்புற வாழ்வையும் தனித்துவமான நடைமுறைகளை மாத்திரம் உள்ளடக்கியிருக்கவில்லை. அவை மொழியியல், அறிவியல். தத்துவவியல், சமூகவியல் என்று ஆய்வுக்கான மூலங்களை உள்ளடக்கியுள்ளன. இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் வாழ்க்கை முறையில் பாரம்பரிய கலாசாரம், மதநம்பிக்கைகள் மற்றும் சமூகவியல் அம்சங்கள் அவசியமான பங்காற்றுகின்றன. குறிப்பாக, குழந்தைப் பருவத்தில் மக்களிடையே நிலைத்துவிடும் மதம் சார்ந்த விழுமியங்களைப் பரப்புவதில் தாலாட்டு பாடல்கள் குறிப்பிடத்தக்க செயற்பாட்டை மேற்கொள்கின்றன. தாய்மார்கள் குழந்தைகளைத் தூங்கச் செய்யும்போது பாடும் இந்த தாலாட்டுப் பாடல்கள், பாசம், கவலை, மற்றும் வழிகாட்டுதலின் வெளிப்பாடாக மட்டுமல்லாமல், இஸ்லாமிய போதனைகளைக் கொண்ட பாடல்களாகவும் விளங்குகின்றன.

“மக்கள் குழந்தையைப் பெற்று மகிழ்ந்த அன்றைக்கே தாலாட்டு இலக்கியம் தோன்றிவிட்டது. தொடக்கமும் முடிவும் அறிய முடியாத வரலாற்றுச் சிறப்புடையது தாலாட்டு” (அரவிந்தன், 1977). என தாலாட்டின் தோற்றம் பற்றி திரு. அரவிந்தன் குறிப்பிடுகிறார். “தாய்மை உலகிற்கு வழங்கிய முதல் இலக்கியப் பரிசுதான் தாலாட்டாகும் (தமிழண்ணல், 1960). குழந்தைகளைத் தூங்க வைப்பதற்கும், உணவு ஊட்டுவதற்கும் தாலாட்டுப் பாடல்கள் தாய்மார்களினாலும், மற்றவர்களினாலும் பாடப்படுகின்றன. குழந்தைகளின் சின்ன இதயங்களைச் சுண்டி இழுத்து, அவர்களை ஆனந்தக் களிப்பில் ஆற்றுப்படுத்தும் ஆற்றல் பெற்றுள்ள தாலாட்டுப் பாடல்களில் பசுமையான நினைவுகளும், பக்குவமான கற்பனைச் சுவையும், இளவேனிற்கால இன்ப அழகும் தனித்துவம் பெற்று மிளிர்வதைக் காணலாம் (முத்துமீரான், 1997). “குழந்தையை நித்திரையாக்கல், அமைதியாக்கல், பாலூட்டடல், உடற்பயிற்சி, இசையுணர்வு, இறையருள் வேண்டடல், தாயின் மகிழ்ச்சி வெளிப்பாடு, எதிர்கால இலட்சிய வளர்ப்பு, பரம்பரைப் பெருமை கூறல், குடும்ப நிலை கூறல், அருகிலிருப்போருக்கும் தமது கருத்தை அறிவித்தல் போன்ற உபயோகங்களை உள்ளடக்கியதே தாலாட்டு (1979) என பாலசுந்தரம் தாலாட்டின் உள்ளக்கப் பொருள் பற்றி விளக்கியுள்ளனர்.

தாலாட்டுக்கள் எவரிடமிருந்து பிறந்தாலும், அவைகள் அழுகின்ற குழந்தைகளை உறங்கச் செய்து அமைதிப்படுத்தவே பிறக்கின்றன. பல வழிகளால் ஓடி வந்து கடலில் சங்கமமாகும் நதிகளின் நீர்போல், தாலாட்டுக்கள் எந்தத் தாயின் வாயிலிருந்து பிறந்து வந்தாலும், அத்தாலாட்டுக்கள் அனைத்தும் குழந்தையின் அமைதிக்கடலிலேயே சங்கமமாவதைக் காண்கின்றோம் (முத்துமீரான், 2007). தாய்மை உலகிற்கு பொதுவானது. தாலாட்டுப் பாடும் ஒரு தாய் கற்பனைத்தேரில் தன்குழந்தையை ஏற்றிக் கொண்டு சந்திரனுக்கும், வெள்ளிக்கும் போய் அங்குள்ள முத்துக்களையும், வைடூரியங்களையும் அள்ளிக் கொண்டு வந்து, பிள்ளைக்குக் கொடுத்து விடுகிறாள்.

தாலாட்டுப்பாடித் தங்கள் குழந்தைகளைக் கண்ணுறங்க வைப்பதில் எல்லாத் தாய்மார்களையும் போலவே முஸ்லிம் அன்னையர்களும், தாலாட்டுப் பாடுகின்ற திறமையும், சிறப்பும் கொண்டவர்களாக இருப்பதைக் காண்கின்றோம். ஆனால்

முஸ்லிம்கள் ஏகத்துவக் கொள்கையில் என்றும் உறுதியாக இருப்பதனால். முஸ்லிம் தாய்மார்களின் தாலாட்டுப்பாடல்களும் ஏகத்துவக் கொள்கையிலிருந்து அணுப்பிச காத நிலையில் உள்ளதைக் காணலாம். முத்துமீரான் (2007) தாம் கற்ற, கேட்டறிந்த பல்வேறு ஆன்மீக நலன் சார்ந்த விடயங்களை தம் குழந்தைகளும் காது வழியே கேட்டு அமைதிகாண, நல்ல வார்த்தைகளைத் தொட்டில் காலம் முதல் கேட்டு உணர வேண்டும் என்பதில் பெரும் ஆவல் கொண்டு தாலாட்டின் ஊடாக தாய் தன் குழந்தைக்கு இஸ்லாமிய நெறிமுறைகளை கற்பிக்க முனைகிறாள் என்ற எடுகோளினையும் தாலாட்டின் அடிப்படை நோக்கத்தின் மேலீடாக அவதானிக்க முடிகின்றது.

## ஆய்வு முறையியல்

இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் தாலாட்டுப் பாடல்கள் எனும் எஸ். முத்துமீரான் எழுதிய புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தாலாட்டு பாடல்களில் உள்ள இஸ்லாமிய போதனைகளை விமர்சன ரீதியாக அணுகுதலையே இவ்வாய்வு நோக்கமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், இந்நோக்கு முன்னைய இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு அடையப்பட்டுள்ளது. எஸ். முத்துமீரான் அவர்களின் நூலில் உள்ள ஏழு பாடல்கள் கருத்துப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், இஸ்லாமிய போதனைகள் தொடர்பான முன்னணி நூல்கள், தாலாட்டு பாடல்கள் பற்றிய சமூகவியல், மொழியியல் மற்றும் இலக்கிய ஆய்வுகள், முஸ்லிம் சமூகத்தின் பாரம்பரிய பாடல்கள் குறித்து ஏற்கனவே வெளியிடப்பட்ட கட்டுரைகள், ஆய்வுகள் மற்றும் நூல்கள் போன்றவற்றில் காணப்படும் தாலாட்டுப் பாடல்களில் உள்ள இறைநம்பிக்கை, நபி(ஸல்) பற்றிய அன்பு, முஸ்லிம்கள் வழக்கமாக கடைப்பிடித்துவரும் துஆக்கள், நற்குணப் போதனை மற்றும் இஸ்லாமிய கடமைகள் குறித்த எண்ணக்கருக்கள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு, உள்ளடக்கப்பகுப்பாய்வு மற்றும் விமர்சன அணுகுமுறை ஆகிய முறைகளினூடாக முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## கண்டறிதலும் கலந்துரையாடலும்

தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட இலங்கை வாழ் கிராமத்து முஸ்லிம் தாய்மார்கள் தமது குழந்தைகளை தூங்கச் செய்ய பாடிய தாலாட்டு பாடல்களில் இருந்தும் எஸ்.முத்துமீரான் அவர்களினால் தொகுத்து வழங்கப்பட்ட "இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் தாலாட்டுப் பாடல்கள்" எனும் நூலில் 17 பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றில் இருந்து ஏழு பாடல்கள் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டு, இஸ்லாமிய போதனைகள் எவ்வாறு பொதிந்துள்ளன என்பதை உள்ளடக்கப் பகுப்பாய்வுக்கு உற்படுத்தி விமர்சன பகுப்பாய்வின் ஊடாக இக்கலந்துரையாடலை மேற்கொள்ள இவ்வாய்வு முனைகின்றது.

**தாலாட்டு – 01**

**கற்பக் கருவறையில்.**
**கண், காது, வாய், மூக்கு**
**உப்பத்தி செஞ்ச ரப்ப..**
**உத்துணந்து நித்திரசெய்**

**ஆழிக்கடல் முத்தே.. என்ர.**
**அகமதரே சீதவியே..**
**நேந்துபெத்த.. பாலகரே.. நீங்க**
**நிம்மதியா. நித்திரசெய்**

**ஓதிப்படிச்சி நீங்க.**
**ஒழுங்கா.. வரவேணும்**
**அல்லா.. தொணபுரிவான்.. என்ர**
**ஆணிமுத்தே. நித்திரசெய்..**

பதினொரு அடிகளைக் கொண்ட இத்தாலாட்டு பாடலின் இங்கு வழங்கப்பட்டுள்ள

இம் மூன்று அடிகளில் எமது ஆய்வுக்கான பொருள் உள்ளடக்கப்பட்டுள்ளன. முதலாவது அடியில் மனிதப் படைப்பின் படைப்பாளி யார் என்பதை ஒவ்வொரு உறுப்பையும் குறித்துக்காட்டி அவற்றை படைத்தது அல்லாஹ்தான் எனும் அடிப்படை அறிவு அன்னையர்களின் வாய்வழியாகக் கடத்தப்படுவதை இத்தாலாட்டு சான்று பகிர்கின்றது. மனித படைப்பின் படைப்பாளி யார் என்ற வினாவுக்கு இன்றைய அறிவியல் பல்வேறு கோணங்களில் விடை காண முனைகின்ற போதிலும், அல்குர்ஆன் படைப்பின் தத்துவம் தொடர்பில் இவ்வாறு "பின்னர் அந்த இந்திரியத் துளியை அலக் என்ற நிலையில் ஆக்கினோம்; பின்னர் அந்த அலக்கை ஒரு தசைப் பிண்டமாக்கினோம்; பின்னர் அத்தசைப்பிண்டத்தை எலும்புகளாகவும் ஆக்கினோம்; பின்னர், அவ்வெலும்புகளுக்கு மாமிசத்தை அணிவித்தோம்; பின்னர் நாம் அதனை வேறு ஒரு படைப்பாக (மனிதனாகச்) செய்தோம். (இவ்வாறு படைத்தவனான) அல்லாஹ் பெரும் பாக்கியமுடையவன் (படைப்பாளர்களில் எல்லாம்) மிக அழகான படைப்பாளன்' (23:14) கூறுகின்றது. கிராமத்து தாய்மார்கள் தாம் ஏற்றுக் கொண்ட மார்க்கத்தின் நிழலில் நின்று தமது குழந்தைகளுக்கு அடிப்படையான அறிவினை போதிக்கிறாள். படைப்பாளன் அல்லாஹ்தான் என்பதை இஸ்லாமிய தாய் தன் குழந்தையின் காது வழியே உரத்துக் கூறுகிறாள். இதன் ஊடாக தாயின் இஸ்லாமிய அறிவுப்புலமை, கற்பித்தல் ஒழுங்கு, குழந்தை கற்க வேண்டிய முதல் கல்வி யாது போன்ற வினாக்களுக்கான விடை வெளிப்படுத்தப்படுகின்றது.

இரண்டாவது அடியில் "நேந்து பெத்த பாலகரே.. நீங்க' பாடலின் இவ்வார்த்தை குழந்தைப் பாக்கியம் பெற அன்றைய அன்னையர்கள் பெற்றிருந்த பிரதான அறிவு நிலை அல்லாஹ்விடம் நேர்ச்சை செய்து அவற்றை நிறைவேற்றி தமக்குக் குழந்தைப் பாக்கியம் பெற பிரார்த்தனை புரிந்து தமது இலக்கினை அடைவதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளார்கள். நேர்ச்சை பற்றி அல் குர்ஆன் "பின்னர் அவர்கள் தம்மிடம் உள்ள அழுக்குகளை நீக்கட்டும்! தமது நேர்ச்சைகளை நிறைவேற்றட்டும்! பழமையான அந்த ஆலயத்தை தவாஃப் செய்யட்டும்" (76:7) என்று பிரஸ்தாபிக்கின்றது. இறைபக்தி, இறைநேசம் என்பது சாதாரணமாக ஊற்றெடுக்கும் தாலாட்டில் தடம் பதித்தல் என்பது அன்னையர்களில் இறைதொடர்பை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. குழந்தைப் பாக்கியம் பெற்றுக்கெள்ள மருத்துவ ரீதியாகவும், சடங்கு சம்பிரதாயம் என பல்வேறு முயற்சிகளை மனிதன் முன்னெடுக்கின்றான். தன்னை படைத்த இறைவன் தனக்கான குழந்தை செல்வத்தை வழங்குவான் எனும் உயர்ந்த நம்பிக்கையோடு எடுக்கப்படும் முயற்சியே நேர்ச்சையாகும். "ஓதிப்படிச்சி நீங்க. ஒழுங்கா.. வரவேணும்". ஒரு மனிதனின் உயர்வு, அடைவு, எதிர்கால மிளிர்வு என்பன போன்ற எதிர்பார்ப்புகள் "ஓதிப்படிச்சி" மார்க்கக் கல்வி, உலகக்கல்வி ஆகிய இரண்டையும் இணைத்து கற்பதன் மூலம் அடையப்படும், என்பதை எழுத, வாசிக்கத் தெரியாத தாய் வாய்மொழி கற்பித்தல் ஊடாக மேற்கொள்கிறாள்.

இதில் "ஓத" வேண்டும் என்பது அல் குர்ஆனை கற்றுக்கொள்வதை தாய் எடுத்துக்கூறுகிறாள். இதனை இவ்வாறு அல் குர்ஆன் கூறுகின்றது "முஹம்மத் (ஸல்) பிரதானமான பணி, தனது சமூகத்தினருக்கு தேவையானவற்றைக் கற்றுக் கொடுப்பதோடு அவர்களை நன்மை, சிறந்ததின் பக்கம் வழிகாட்டுவதாகும். இறைதூதரின் பொறுப்புகள் பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது. அவன்தான் எழுத்தறிவில்லாத சமூகத்தார்களின் மத்தியில் அவர்களிலிருந்தே ஒரு தூதரை அனுப்பி வைத்தான். அவர் அவனுடைய வசனங்களை அவர்களுக்கு ஓதி காண்பித்து,

அவர்களைப் பரிசுத்தமாக்கி தீர்க்கமான அறிவை(சுன்னா)யும் கற்றுக் கொடுக்கின்றார்" (ஸரா:ஜம்ஆ-2). "அல்லா தொணபுரிவான்" ஒரு முஸ்லிம் தனது அடிப்படை நம்பிக்கையாக கடைப்பிடிப்பது தனது அனைத்து காரியங்களுக்கும் அல்லாஹ் ஒருவன் துணையாக இருப்பான், தனது இன்பம், துன்பம், நலவு, கெடுதி என அனைத்து விடயங்களிலும் அல்லாஹ்வின் தீர்ப்பு, நாட்டம் என்பது இன்றியமையாத விடயமாகும். இந்த நம்பிக்கையையே இங்கு தாயானவள் தன் குழந்தைக்கு போதிக்கிறாள். கல்வியற்ற ஒரு சமூகம் நேர்த்தியான வாழ்வுக்கான கோட்பாடுகளை கொண்டிருக்க முடியாது. நீதி, நியாயம், ஒழுக்கம் என்ற அனைத்து பண்பாடு களையும் தனது குழந்தை வாழ்வில் கடைப்பிக்க தாய் ஆசைப்படுகிறாள். அதனையே "ஓதிப்படிச்சி. நீங்க ஒழுங்கா வரவேணும்" என்ற பிரயோகத்தினூடாக தாய் தன் குழந்தைக்கும் சமூகத்துக்கும் செய்தி சொல்கிறாள்.

**தாலாட்டு - 02**

**ஆராரோ. ஆரிவரோ...**
**ஆரச்சி.. நீயழுதாய்?**
**அல்லா.. எனக்களித்த ..**
**செல்வமே நீ நித்திரசெய்..**

மனிதன் பெற்றுள்ள அருட்கொடைகளிலே மிகப்பெரியது குழந்தைகள் தான். அல்குர்ஆன் குழந்தைகளை "ஹிபா பரிசு", "ஜீனத் அலங்காரம்", "குர்ரத்துல் அய்ன் கண் குளிர்ச்சி" "நிஃமத் அருட்கொடை" என்றெல்லாம் வர்ணிக்கிறது. இத்தாலாட்டில் குழந்தைச் செல்வம் அல்லாஹ் ஒரு மனிதனுக்கு வழங்கும் பெருஞ்செல்வம் என்பது இவ்வடியின் பொருளாகப் பாடப்பட்டுள்ளது. எத்தனையோ செல்வங்களை மனிதன் தேடுகிறான் அவற்றை பொதுவாக மனிதன் தனது உழைப்பால் தேடியது என்று கூறத்தயங்க மாட்டான். ஆனால் குழந்தை செல்வம் என்ற ஒன்றை மட்டும் எந்த மதம் சார்பானவராக இருந்த போதிலும் கடவுள் வழங்கிய செல்வம் அல்லது கடவுள் வழங்க வேண்டிய செல்வம் என்றே மனிதன் உறுதியாக கூறுகின்றான்.

இத்தாலாட்டில் தனக்கு குழந்தை செல்வத்தை வழங்கியது அல்லாஹ்தான் எனும் ஈமானிய செய்தி உறுதியாகக் கூறப்பட்டுள்ளது. இஸ்லாமிய போதனையைப் பின்பற்றுகின்ற இத்தாய் தனது குழந்தை அல்லாஹ் வழங்கிய செல்வம் என்று கூறி அழைப்பதுடன், தனது குழந்தைக்கும் அச்செய்தியை காது வழியே கடத்துகிறாள். குழந்தைகள் சீராக வழங்கப்பட்டால் அடைந்து கொள்ளும் பிரதான நன்மை பற்றி பின்வரும் நபி மொழி இவ்வாறு தெளிவுபடுத்துகின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், ஒரு மனிதன் இறந்து விட்டால் மூன்று செயல்கள் தவிர மற்ற அனைத்துமே நின்று விடுகின்றன. நிலையான தர்மம், பிறருக்கு பயன்பெறும் வகையில் அவன் கற்றுக்கொடுத்த கல்வி. அவனுக்காக பிரார்த்தனை செய்கிற நல்ல குழந்தைகள் (முஸ்லிம் 3358).

**தாலாட்டு - 03**

**முத்துக்கலிமாவ. நீ**
**பக்தியுடன் அறிஞ்சுணந்து**
**பெத்தவளின மனங்குளிர ..**
**சித்திரமே.. நித்திரசெய்**
**அஞ்சி கலிமாவயிம். நீ..**
**ஆராஞ்சி.. பாத்து நல்லா**
**நெஞ்சில் அத.. இருத்தி நீ..**
**நெனவோடு நித்திர செய்..**

எதிர்காலத்தில் தனது குழந்தை வளர்ந்து கல்வி தேடும் போது எதனை கற்க வேண்டும் என்பதை இங்கு தாய் தாலாட்டில் தன் ஆசையை எடுத்துக்கூறுகிறாள். இஸ்லாத்தின் முதலாவது தூன் கலிமாவாகும். இங்கு கலிமாவின் ஊடாக தன்னை படைத்தவனையும், தனது வாழ்வின் வழிகாட்டியாக அருளப்பட்ட தூதர் முஹம்மது (ஸல்) அவர்களையும் பயபக்தியுடன் அறிந்து தமது வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற போதனை உரைக்கப்பட்டுள்ள. கலிமாவை அறிய வேண்டும், கலிமா கூறும் செய்தி

ஆராய்ந்து அறியப்பட வேண்டும், கலிமாவில் அல்லாஹ்வை தன் இறைவனக ஏற்றுக்கொள்ள தனக்கான தூதராக முஹம்மத் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்ளல் என்பதும் பிரதான விடயமாகும். அவ்வாறு ஏற்றுக் கொள்கின்ற ஒரு மனிதனுடைய வாழ்வின் அனைத்து கருமங்களிலும் அவர்களைப் பின்பற்றுவதன் அவசியம் உணரப்படும். அல்லாஹ்வும் தூதரும் எமது வாழ்வுக்கு எடுத்துரைத்துள்ள நன்மை தீமைகளை அடையாளம் கண்டு வழிப்பட முடியும்.

**தாலாட்டு - 04**

**நித்திர.. மவுத்தாகும் நீ**
**நெனக்கிறது அயாத்தாகும்**
**உத்துணந்து. மடிமீது**
**உசும்பாம. நித்திர செய்**

அல்லாஹ், உயிர்களை அவை மரணிக்கும் போதும், மரணிக்காதவற்றை அவற்றின் நித்திரையிலும் கைப்பற்றி, பின்பு எதன் மீது மரணத்தை விதித்து விட்டானோ அதை (த் தன்னிடத்தில்) நிறுத்திக் கொள்கிறான். மீதியுள்ளவற்றை ஒரு குறிப்பிட்ட தவணைவரை (வாழ்வதற்காக) அனுப்பி விடுகிறான் சிந்தித்துப் பார்க்கும் மக்களுக்கு நிச்சயமாக அதில் அத்தாட்சிகள் இருக்கின்றன. (அல்குர்ஆன்: 39:42)

மனிதன் வாழ்வு, மரணம் என்ற இரண்டு கோட்பாடுகளுக்கு இடையில் தனது வாழ்வை நகர்த்திச் செல்கின்றான். இந்நிலையில் தூக்கம் என்பது சிறு மரணம், நினைவுடன் இருப்பதுதான் உயிரோடுள்ளேன் என்ற அர்த்தம் கொடுக்கும் என்பதை இப்பாடல் அடி தெளிவுபடுத்துகின்றது. கண்மூடி திறக்காமல் ஆகும் நிலை மரணம் என்ற சிந்தனையை இத்தாய் தன் குழந்தைக்கு கற்பிக்கிறாள்.

**தாலாட்டு - 05**

**அல்லாவ நெனச்சி நீ**
**அனுதினமும் சுஜூது செய்து.**
**மாயன்.. இபுலீசி**
**மருண்டோட நித்திரசெய்**

மனிதன் தன் வாழ்வின் அனைத்து விடயங்களிலும் அல்லாஹ்வுடைய நினைவோடு தான் வாழவேண்டும். இன்ப, துன்பங்களில் அல்லாஹ்வுடைய நினைவோடு அவனை சுஜூது செய்வதே மறுமையை நம்பிக்கை கொள்ளக்கூடிய ஒரு மனிதனுடைய வாழ்வில் வெற்றிப் பாதையை திறந்து கொடுக்கும். ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹ அலைஹி வஸல்லம் அவர்கள் கூறத் தாம் கேட்டதாக நபி அவர்களின் உரிமை விடப்பட்ட அடிமை ஸவ்பான் ரலியல்லாஹ அன்ஹ அவர்கள் அறிவிக்கிறார்கள்; நீர் அதிகமாக அல்லாஹதஆலாவிற்கு ஸஜ்தாச் செய்து வருவீரக, (தொழுது வருவீரக) நிச்சயமாக நீர் செய்யும் ஒவ்வொரு ஸஜ்தாவைக் கொண்டும் அல்லாஹதஆலா உமக்கு ஓர் அந்தஸ்ததை உயர்த்துகிறான்; உம்மை விட்டும் ஒரு பாவத்தை அழிக்கிறான். (முஸ்லிம்) ஒரு முஸ்லிம் தனது வாழ்வில் தினதும் அல்லாஹ்வுக்காக தொழுகை என்ற வணக்கத்தை நிறைவேற்ற வேண்டும். ஐந்து வேளை அல்லாஹ்வுக்காக சுஜூது செய்வது இறைநெருக்கத்தை ஏற்படுத்தும், மனித இனத்தின் எதிரியான இபுலிசு (சைத்தான்) மனிதனை வழி கெடுப்பதில் இருந்து விரண்டோட வேண்டும் எனில் அல்லாஹ்வுடன் ஒரு மனிதனுக்கு உள்ள தொடர்பு சுஜூதினால் இணைக்கப்பட வேண்டும் என்பதை தாய் தன் குழந்தைக்கு கற்றுக் கொடுக்கிறாள்.

**தாலாட்டு - 06**

**மக்கத்து.. நாயகத்த நீ ..**
**மனசெல்லாம் நெறச்சிவெச்சி**
**அச்சிக்கு. போய்வரணும் . என்ர..**
**ஆணிமுத்தே நித்திரசெய்..**

ஒரு முஸ்லிம் தனது வாழ்வில் எவற்றை செய்வதன் மூலம் உயர்வான சுவனத்தை அடைந்து கொள்ள முடியுமோ, அவற்றுக்கான உழைப்பு இவ்வுலகில் மேற்கொள்ளப்பட வேண்டும். கலிமா முதல் ஹஜ் வரையிலான அனைத்து கடமைகளையும் சீராக

நிறைவேற்ற வேண்டும். ஒரு முஸ்லிம் தனது வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய கடமைகளுள் இறுதியாக வசதி வருகின்ற போது நிறைவேற்றும் கடமை ஹஜ் ஆகும். தன் பிள்ளை ஹஜ் செய்ய வேண்டும் என்று தாய் ஆசைப்படுகிறாள், ஹஜ் வணக்கத்தை நிறைவேற்ற வசதி, வாய்ப்பு கிடைக்க வேண்டும் என பெற்றோர் தம் பிள்ளைகளுக்காகப் பிரார்த்தனை புரிய வேண்டும் எனும் அழகிய வழிமுறை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

குழந்தைக்கான கல்வியைத் தேர்வு செய்கின்ற போது அக்கல்வி சுவனத்தை நோக்கி மனிதனை அழைத்துச் செல்லுமா எனத் தாய் சிந்திக்கிறாள். அதன் வெளிப்பாடே இத்தாலாட்டு முழுக்க ஒரு தாய், தன் பிள்ளை எதிர்காலத்தில் எவ்வாறு இஸ்லாமியப் போதனைகளுடன் ஒன்றிணைந்து வாழவேண்டும் என்பதை தூரநோக்கோடு பார்க்கிறாள். தன் பிள்ளைக்கு அவள் வழங்க வேண்டும் என்று ஆசைப்படுகின்ற கல்வி எது என்பது சுட்டிக்காட்டப்படுகின்றது.

**தாலாட்டு- 07**

**கொத்துவா பள்ளியிலே ..**
**என்னரசி.. கண்ட மகனார் .. நீங்க**
**கொறுவானும் .. ஓதுறதோ?**

முஸ்லிம்கள் தாம் வாழும் பிரதேசத்தில் மார்க்கக் கல்வியை கற்றுக் கொள்ள அப்பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த பள்ளிவாசலைப் பாடசாலையாகப் பயன்படுத்தியுள்ளனர் அங்கு அல் குர்ஆனை கற்றுக் கொள்ளல், மார்க்க சட்ட ஒழுங்குகளை கற்றுக் கொள்ளல், நபி (ஸல்) அவர்களின் போதனைகளை கற்றுக் கொள்ளல் என்பன கற்பித்தல் செயற்பாடாக நடைபெற்றுள்ளன. அதன் பிரகாரமே இத்தாலாட்டிலும் அப்பிரதேசத்தில் அமைந்துள்ள பிரதான ஜும்ஆ பள்ளிவாசலில் அல் குர்ஆன் கற்பித்தல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. முஸ்லிம்களின் வேதநூலான அல் குர்ஆனை சிறுபராயத்தில் இருந்து கற்றுக்கொண்டு, பொருள் விளக்கம் அறியாவிட்டாலும், ஓது வதனால் கிடைக்கும் நன்மைகளை தமது குழந்தைகள் அடைந்து கொள்ள வேண்டும் என்பதில் ஒவ்வொரு பெற்றோரும் ஆசைப்படுகிறார்கள் அதனையே தாலாட்டில் இத்தாய் தன் பிள்ளை அவ்வூரில் உள்ள கொத்பா (வெள்ளிக்கிழமை நடாத்தப்படும் உரை) பள்ளிவாசலில், அல் குர்ஆன் கற்பிக்கப்படுகின்றது, எனவே அங்கு தன்பிள்ளையும் அல் குர்ஆனை கற்று ஓதவேண்டும். என்று ஆசையுடன் குழந்தையை நோக்கி வினாத் தொடுக்கிறாள். முஸ்லிம் சமூகத்தில் ஒரு குழந்தை கற்றுக்கொள்ளும் முதாவது கல்வியாக அல் குர்ஆனை வாசிப்பதற்காக எடுத்துக் கொள்ளும் பயிற்சியே அவதானிக்கப்படுகின்றது. அல்குர்ஆனுடன் இரண்டு விதமான தொடர்புகளை ஏற்படுத்துவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கட்டாயக் கடமையாகும்.

1. திருக்குர்ஆனை பொருளறிந்து படிப்பது. அதன் கட்டளைகளைப் புரிந்து அதன் அடிப்படையில் வாழ்க்கையை அமைத்துக் கொள்வது.
2. அல்குர்ஆனை அதிகமாக ஓதி அளவற்ற நன்மையைப் பெற்றுக் கொள்வது.

எவர் குர்ஆனிலிருந்து ஒரு எழுத்தை ஓதினால் நன்மை இருக்கிறது. ஒரு நன்மை அதுபோன்று பத்து மடங்காக்கப்படும். "அலீஃப், லாம், மீம்" ஒரு எழுத்து என்று சொல்லமாட்டேன். மாறாக அலீஃப் ஒரு எழுத்து, லாம் ஒரு எழுத்து, மீம் ஒரு எழுத்துமாகும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (திர்மிதி, தாரமி.)

**தாலாட்டு- 08**

**அல்லாஹ் உதவியுண்டு மகனே,**
**அவுலியாக்கள் காவலுண்டு**
**நாயன் கிருபையுண்டு மகனே,**
**நாச்சிமாரின். துணையுமுண்டு.**

**நாயன்ர காவலாலே நீ.**
**நல்லபடி சொகமாயிருப்பாய்**

***படைத்தவண்ட காவலாலே உனக்கு***
***பழுதொண்டும் வந்திராது.***

***நோய்வராமல் பேய்வராமல் மகன***
***காத்துத்தா வல்லவனே.***
***வல்லவனே உன்னிடத்தில ஏழ நான்***
***வலிந்து துவாக் கேட்கின்றேன்***

***இரந்து துவாக் கேக்கிறேன் கையேந்தி***
***இறையோனே உன்னிடத்தில்***
***பரிந்து துவாக் கேக்கிறேன் நான்,***
***படைத்தவனே உன்னிடத்தில்***

***கேட்டேனே உன்னிடத்தில் என்ர,***
***கிருபையுள்ள நாயனே .***
***கேட்டதுவா வெற்றிபெற . நீ***
***கிருப செய்வாய். ரகுமானே.***

இத்தாலாட்டு இரண்டு விடயங்களை உள்ளடக்கியுள்ளது. முதலாவது பாதுகாப்பு இரண்டாவது பிரார்த்தனை. ஒரு மனிதன் தன் வாழ்வில் சந்திக்கும் நோய் முதல் மனிதனால், ஏனைய படைப்பினங்களால் ஏற்படுகின்ற அனைத்து தீங்குகளில் இருந்தும் தனக்கான பாதுகாப்பு, நிவாரணி என்பவற்றைத் தேடுகின்றான். ஒரு முஸ்லிம் தனது நம்பிக்கை கோட்பாட்டின் அடிப்படையில் தனக்கு நன்மை, தீமை அனைத்தையும் ஏற்படுத்தக் கூடியவன் அல்லாஹ் எனும் விடயத்தில் உறுதியான நம்பிக்கையில் உள்ளான். ஆதன் பிரகாரமே இத்தாலாட்டில் "அல்லாஹ் உதவியுண்டு" "நாயன் கிருபையுண்டு" "நாயன்ர காவலாலே" "படைத்தவண்ட காவலாலே" போன்ற பிரயோகங்களில் தனது முழு நம்பிக்கையையும் முஸ்லிம் தாய் வெளிப்படுத்துகிறாள்.

அல்லாஹ்வே நம்மைப் பாதுகாக்க போதுமானவன். அவனே நமக்கு உதவப் போதுமானவன். அவன் தான் நமது சிறந்த எஜமானன்.

**FP9REN 'DRENHRDNI HNFP9REN 'DFQN5PJ1O**

சிறந்த எஜமானன் அவன் தான் சிறந்த பொறுப்பாளன் அவன் தான். சிறந்த உதவியாளனும் அவன் தான். (அல்குர்ஆன் 6 : 40)

**AN'DDQNGO .NJR1L -N'AP8K' HNGOHN #N1R-NEO 'D1QN'-PEPJFN**

பாதுகாவலர்களில் சிறந்த பாதுகாவலன் அல்லாஹ் தான். அவன்தான் மகா கருணையுடையவன். கருணையாளர்களில் எல்லாம் மிகக் கருணையுடையவன். (அல்குர்ஆன் 12 : 64)

குழந்தைகளுக்கு நோய், தீங்கு, இதர பாதிப்புகளில் இருந்து பாதுகாப்பு கிடைக்க வேண்டும் என்பதற்காக அல்லாஹ்வை முன்னிறுத்தி தனது குழந்தைக்கான பாதுகாப்பு வேண்டப்பட்டுள்ளது. இரண்டாவதாக மனித தேவைகள் அனைத்தும் பிரார்த்தனை ஊடாக நிறைவேற்றிக் கொள்ளப்பட வேண்டும் என்ற அடிப்படை கொள்கையை இத்தாலாட்டின் மூலமாக வெளிப்படுத்தப்படுவதுடன், பிரார்த்தனை புரிகின்ற போது எவ்வாறான நிலை பேணப்பட வேண்டும் என்பதும் இங்கு வெளிப்படுத்தப்படுகின்றது. நோய்களில் இருந்து பாதுகாப்பை அல்லாஹ் வழங்குவான் என்ற உறுதியான நம்பிக்கை இங்கு மேலோங்கி இருப்பது உறுதிப்படுத்தப்படுகின்றது. "வல்லவனே" "படைத்தவனே" "கிருபையுள்ள நாயனே" "ரகுமானே" போன்ற சொற்களின் மூலம் தனது எஜமான் அல்லாஹ் என்பதும் அவனுடைய புகழ், பண்புகளை கூறி பிரார்த்தனை புரியவேண்டும் என்பது தெளிவாகுவதுடன் "ஏழ நான் வலிந்து" "இரந்து துவாக் கேக்கிறேன்" "கையேந்தி" "பரிந்து துவா கேக்கிறேன்" போன்ற சொற்கள் மனிதனின் இயலாமையை ஏற்றுக்கொண்டு படைத்தவனிடம் சரணடைதல் மூலமே தமக்கான வெற்றியை அடைந்து கொள்ள முடியும் என்பதும் இங்கு புலப்படுத்தப்படுகின்றது.

*(நபியே!) என்னுடைய அடியார் என்னைப் பற்றி உம்மிடம் கேட்டால் நிச்சயமாக நான் அவர்களுக்கு மிகச் சமீபமாக உள்ளேன். என்னை அழைத்தால் அழைப்பவரின் அழைப்பிற்கு நான் பதிலளிக்கிறேன். அவர்கள் நேர்வழி பெறுவதற்காக என்னையே அழைக்கட்டும், என்னையே விசுவாசம் கொள்ளட்டும். (அல்குர்ஆன் 2:186)*

*உங்களுடைய இறைவன் கூறுகிறான். நீங்கள் என்னையே அழைத்துப் பிரார்த்தியுங்கள். நான் உங்களுடைய பிரார்த்தனைக்குப் பதிலளிப்பேன். நிச்சயமாகஎன்னை வணங்குவதை விட்டும் பெருமையடிப்பவர்கள் இழிவடைந்தவர்களாய் நரகில் புகுவார்கள். (அல்குர்ஆன் 40:60)*

மனித தேவைகள் அனைத்தும் பிரார்த்தனை மூலம் நிறைவேற்றிக் கொள்ள பணிவுடன் பொறுமையுடன் அல்லாஹ்வின் பன்புகள், பெயர்களைக் கூறி தமது பிரார்த்தனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற புரிதலுடன் இத்தாய் தாலாட்டாக தனது குழந்தைக்குப் பிரார்த்தனை புரிவதை இப்பாடல் தெளிவுபடுத்துகின்றது.

**தாலாட்டு – 12**

**வளர்பொறயே வன்னிமையே எங்கிட**
**வங்கிசத்தின் தலமகனே அல்லாட**
**தீன்மறய அனுதினமும் நீ ஓதி**
**நாயனருளாலே நல்லவனாய் கண்ணுறங்கு.**
**ஆதி இறயோனை மகனே**
**அஞ்சொகுத்தும் நீ தொழுது**
**நல்லவனாய் நீவரணும் என்ர**
**வள்ளலே நீ நித்திரசெய்**

**ஓதிற பள்ளியிலே மகனார்நீ. கொறுவான**
**ஒழுங்காக ஓதிவந்து**
**ஆபிசா வந்திரணும் என்ர**
**ஆண்ணலரே நித்திரசெய்**

இத்தாலாட்டின் மூன்று அடிகளும் மூன்று செய்திகளைப் போதிக்கின்றன. அல் குர்ஆனை ஓதவேண்டும், ஐந்து வேளை தொழவேண்டும், அல் குர்ஆனை ஓதி மனனம் செய்து ஹாபிழாக வரவேண்டும். இவை அன்னையின்; தன் குழந்தை மீதான கனவுகளாக காது வழியே தன் குழந்தைக்கு கடத்துகிறாள். அல் குர்ஆனிய கல்வி, தொழுகைஇவற்றினூடாகவேதன்குழந்தை வெற்றி பெறும் என்ற தாயின் நம்பிக்கை இங்கு வெளிப்படுத்தப்படுகின்றது.

அல் குர்ஆனை தினமும் ஓத வேண்டும், அதன் ஊடாக ஒரு எழுத்துக்கு பத்து நன்மைகளை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன், அல் குர்ஆன் ஓதப்படுகின்ற உயிரோட்டமான வீடாக தமது வீடுகளை குழந்தைகள் மூலம் உயிர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற சிறந்த செயல் வலுவூட்டப்படுகின்றது. அத்துடன் தொழுகை என்ற வணக்கத்தை நிறைவேற்றி நல்ல மனிதனாக வாழவேண்டும். தொழுகைதான் ஒரு மனிதனை மானக்கேடான, பாவமான காரியங்களை விட்டும் தடுத்து உயிரோட்டமான ஈமானிய பாதையில் பயணிக்க உதவி செய்கின்றது. எனவே தவறாது கடைப்பிடிக்கப்பட வேண்டிய கடமையாக தொழுகை கற்பிக்கப்படுகின்றது. மேலும் அல் குர்ஆனை பார்த்து ஓதுவதுடன் தமது கடமைநிறைவடைந்திடாது. மாறாகஅவை மனனம் செய்யப்பட்டு உள்ளங்களிலும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையே "கொறுவான ஒழுங்காக ஓதிவந்து ஆபிசா வந்திரணும்.." எனும் வரிகள் உணர்த்துகின்றன.

**தாலாட்டு – 13**

**ஆரா ராரா ராராரோ**
**ஆரிரி ராரா ராராரோ**
**சீராய் உலகம் படைத்தோனின்**
**சிறப்பாம் அல்லாஹ் எனுநாமம்,**
**நேராய் கல்பில் வைத்தே**
**நினைவாய் உறங்கு என்மகனே**

**ஈமானுடனே......... கலிமாவை**
**ஓதித் தொழுது முதலீந்து**
**சீமான் தனக்காய் நோன்பு வைத்து**
**ஹஜ்ஜும் செய்வாய் என்மகனே**

**ஊரின் பொருளும் பட்சணமும்**
**எல்லாம் உனக்கே கிடைத்தாலும்**
**நீரின் குமிழி போலழியும்**
**நிலைக்கும் நல்ல அமல் மகனே**

இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட மனிதன் தனது உள்ளத்தில் தன்னைப்படைத்த அல்லாஹ்வின் நினைவுடன் வாழ்வது தனது ஈமானைப் பலப்படுத்தும் செயற்பாடு என்பதுடன், அல்லாஹ்வின் நினைவுகளுடன் வாழ்வது பாவங்களில் இருந்து ஒரு மனிதனை தூரப்படுத்தும். எனவே ஒவ்வொரு செயலிலும் ஒரு மனிதன் தன்னைப் படைத்தவனை நினைவு கூர்வது செயல், உளரீதியான பாதுகாப்பை ஏற்படுத்தும்.

கலிமா, தொழுகை, நோன்பு, ஹஜ் போன்ற வணக்க வழிபாடுகளின் ஊடாக மாத்திரமே தனது இவ்வுலக மற்றும் தான் நம்பிக்கை வைத்து மறுமை வாழ்வுக்கான வெற்றிக்கான பயணயமாக அமையும் என்பதை, இவ்வுலகின் பொருட்கள், சொத்து, செல்வங்கள் யாவும் ஒட்டு மொத்தமாக எமக்குக் கிடைத்தாலும் அவை சர்வ சாதாரணமாகக் கலைந்திடும் நீரின் குமிழி போல் அழிந்து விடும். உலகத்தில் ஒரு மனிதனுக்குச் சேரக்கூடிய சொத்து, செல்வங்கள், பட்டம். புதவி, அனைத்தும் மனித வாழ்வின் மரணத்தோடு முற்றுப் பெறக்கூடியது. ஆனால் மரணத்தின் பின்னர் நிலைத்து நிற்கக்கூடிய செயலாக ஈமானுடன் மேற்கொள்ளக்கூடியது தொழுகை, நோன்பு, ஹஜ், ஸகாத் போன்ற வணக்க வழிபாடு கள்தான். இதனை அல் குர்ஆன் அறிந்து கொள்ளுங்கள்: “நிச்சயமாக இவ்வுலக வாழ்க்கை விளையாட்டும், வேடிக்கையும், அலங்காரமுமேயாகும்; மேலும் (அது) உங்களிடையே பெருமையடித்துக் கொள்வதும்; பொருள்களையும், சந்ததிகளையும் பெருக்குவதுமேயாகும்; (இது) மழையின் உதாரணத்துக்கு ஒப்பாகும்; (அதாவது:) அது முளைப்பிக்கும் பயிர் விவசாயிகளை ஆனந்தப்படுத்துகிறது. ஆனால், சீக்கிரமே அது உலர்ந்து மஞ்சள் நிறம் ஆவதை நீர் காண்கின்றீர்;. பின்னர் அது கூளமாகி விடுகிறது. (உலக வாழ்வும் இத்தகையதே, எனவே உலக வாழ்வில் மயங்கியோருக்கு) மறுமையில் கடுமையன வேதனையுண்டு. (முஃமின்களுக்கு) அல்லாஹ்வின் மன்னிப்பும், அவன் பொருத்தமும் உண்டு ஆகவே, இவ்வுலக வாழ்க்கை ஏமாற்றும் சொற்ப சுகமே தவிர (வேறு) இல்லை (அல்-குர்ஆன் 57:20)

இவ்வாறான உயர்ந்த ஈமானியப் பன்பு இத்தாலாட்டு உள்ளடக்கியுள்ளது. இவ்வாறான ஒரு போதனை சாதாரணமாகக் கூறப்பட முடியாது. மாறாக தான் ஏற்றுக் கொண்ட மார்க்கப் போதனைகளின் மீது பற்றுக் கொண்டுச் செயலாற்றும் ஈமானிய வெளிப்பாட்டின் அடையாளமே இவை.

**தாலாட்டு 14**

**இஸ்லாத்துக்கு ஐந்து பர்ளென்றுரைத்தார் நபி அதை**
**இன்னதென்றறிவாய் மகனே**
**இஸ்லாத்தையறிந்து நடக்காதவன் கெட்ட**
**ஈனன் என்று சொல்லிச் சாய்ந்தாடு**

**ஐந்தாவதாக சக்தி பெற்றோர் மக்கா சென்று**
**ஹஜ்ஜு செய்யக் கடனாம் மகனே**
**அஞ்சாமல் இஸ்லாத்தின் ஐந்தையும் நீ,**
**ஆராய்ந்து அறிந்து சாய்ந்தாடு**

இத்தாலாட்டும் நேர்வழி ஆற்றுப்படுத்தலுக்கான வழிமுறைகளை உள்ளடக்கியுள்ளன. இஸ்லாத்தின் ஐந்து தூண்கள் என்று உயர்வாக அறியப்படும் கலிமா, தொழுகை, ஸக்காத், நோன்பு, ஹஜ் ஆகிய கடமைகளை, அதன் சட்ட விதிகளை அறிந்து செயலாற்ற வேண்டும். மாறாக இக்கடமைகளை அறிந்து கடைப்பிடிக்காதவன் ஈனப் பிறவி, பாவியாக வாழ்ந்துகொண்டிருக்கிறான். அடுத்து தான் ஏற்றுக் கொண்ட கலிமாவின் பொருள் அறியப்பட வேண்டும், கலிமாவை சொல்லி முஸ்லிம் என்ற பெயரோடு வாழ்வதல்ல இஸ்லாம் என்ற வாழ்வியல் முறை, மாறாக

கலிமா உரைத்து நிற்கும் அல்லாஹ், தூதர் முஹம்மது ஸல் அவர்கள் எடுத்துரைத்த மனித வாழ்வின் வெற்றிக்கான அத்தனை விடயங்களையும் கடைப்பிடித்தல், எச்சரிக்கப்பட்டவைகளை தவிர்த்தல் என்பன அவசியமாகும். இதுவே கலிமாவின் பொருள் அறிதல் என்ற உபதேசம் வேண்டி நிற்கும் பொருளாகும்.

### முடிவுரை

முஸ்லிம்கள் தமது அனைத்து வணக்க வழிபாடுகளையும் திருமறைக் குர்ஆன் மற்றும் நபிவழியின் அடிப்படையிலேயே அமைத்துக் கொள்ள கட்டளையிடப்பட்டுள்ளனர். ஏந்த வணக்கத்தையாவது அல்லாஹ்வும் அவனது தூதரும் காட்டித் தராத முறையில் ஒருவர் செய்தால் அந்த வணக்கம் இறைவனால் நிராகரிக்கப்படும் என நபிகள் நாயகம் அவர்கள் கடுமையாக எச்சரித்துள்ளார்கள். அந்த வகையில் இத்தாலாட்டுப் பாடல்கள் அனைத்திலும் பொதுவான பல்வேறு விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அல்லாஹ்வை அறிதல், ஈமானுடன் வாழல், ஈமானைப் பலப்படுத்த அல்லாஹ்வின் தொடர்பைப் பேணல், தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் போன்ற கடமைகளை பின்பற்றுவதற்கான அழைப்பும் அல் குர்ஆனைக் கற்கவேண்டும், மனனம் செய்ய வேண்டும் என்ற வழிகாட்டல், நல்ல மனிதர்களுடன் உறவைப் பேண வேண்டும், அனைத்து காரியங்களிலும் அல்லாஹ்வின் உதவி, பாதுகாப்பை வேண்டி பிரார்த்தனை புரிய வேண்டும் என்ற வழிகாட்டல் இத்தாலாட்டுப் பாடல்களின் வழியாக அன்னையர்கள் தமது குழந்தைகளுக்கும், தாலாட்டைப் பாடுவோரும், காது வழியே கேட்போரும், இப்பாடல்களைப் பாடும் அனைவரும் உபதேசிக்கப்படுகின்றனர். எழுத, வாசிக்க அல்லது கல்விப் பின்னணியற்ற ஒரு காலப்பகுதியில் குழந்தைகளைத் தூங்க வைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பாடப்பட்ட இத்தாலாட்டுப் பாடல்களில் இஸ்லாமியப் போதனைகள், வாழ்வியலுக்கு ஆற்றுப்படுத்தும் ஆலோசனைகள் வழங்கப்பட்டிருப்பதும், அப்போதனைகள் தொடர்பில் இஸ்லாமிய மார்க்கத்தின் அடிப்படை மூலங்களான குர்ஆன், ஹதீசின் நிழலில் இணைத்து உள்ளடக்கப் பகுப்பாய்வின் மூலம் இவ்வாய்வு மீள் வாசிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

### உசாத்துணை


1. எஸ்.முத்துமீரான். (1997). கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நாட்டார் பாடல்கள். Meeranmma Book Publishers, Nintavur, Sri Lanka.
2. எஸ்.முத்துமீரான். (2007). இலங்கை கிராமத்து முள்லிம்களின் தலாட்டுப் பாடல்கள் (First Edition). National Publishers & Chennai.
3. கலாநிதி இ.பாலசுந்தரம். (1979). ஈழத்து நாட்டார் பாடல்கள்.
4. திரு. தமிழண்ணல். (1960). காதல் வாழ்வு.
5. திரு.மு.வை. அரவிந்தன். (1977). தமிழக நாட்டுப் பாடல்கள்.